செ.வெ.எண். 44/ஆகஸ்ட் தேதி : 19.08.2016

## பத்திரிக்கைச் செய்தி

## காலநடை பராமரிப்புத்துறையின் சார்பில் விலையில்லா கறவை பசு / செம்மறி ஆடுகள் / வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் 2016-17 கிராம அளவிலான பயனாளிகள் தேர்வுக்குழு கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்ய கடைபிடிக்க வேண்டிய முறைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விலையில்லா கறவைப் பசுக்கள், செம்மறியாடு/வெள்ளாடு வழங்கும் திட்டம் தருமபுரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 2016 - 17 ஆண்டில் 35 ஊராட்சிகளில் 3190 பயனாளிகளுக்கு விலையில்லா செம்மறியாடு/வெள்ளாடுகளும், 5 ஊராட்சிகளில் 250 பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்களும் வழங்கப்படவுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் அதகபாடி, பைரநாயகம்பட்டி, பந்தாரஹள்ளி, அதியமான்கோட்டை, அ.மல்லாபுரம் மற்றும் ஆலாபுரம் ஆகிய 6 கிராம ஊராட்சிகளில் 698 பயனாளிகளுக்கு விலையில்லா செம்மறியாடு/வெள்ளாடுகளும், கோடிஹள்ளி மற்றும் சத்தியநாதபுரம் ஆகிய 2 கிராம ஊராட்சிகளில் 100 பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்களும் வருகின்ற நவம்பர் 2016-ம் மாதம் வழங்கப்படவுள்ளது.

அதனையொட்டி வருகிற 22.08.2016 அன்று நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று பயனாளிகளின் இறுதி பட்டியல் குறித்த விவரம் 29.08.2016 அன்று நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் வெளியிடப்படும். மேற்கண்ட கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்று மனுக்கள் வழங்கி பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மண்டல இணை இயக்குநர் மரு. ஸ்ரீனிவாசன், இணை இயக்குநர் மரு. மகேஸ்வரன், உதவி இயக்குநர்கள் மரு. இளங்கோவன், மரு. வில்வம், மரு. ஆர்.எஸ்.டி. பாபு மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.